# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.8
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெகநாத் பிரபு | -- | |
| Father's Name | மனோகரன் | Calling | மருத்துவர் |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மூத்த மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அதிகாரியாக நான் பணிபுரிந்தபோது கடந்த 07.06.2018 ம் தேதி காலை 09.15 மணியளவில் சுமார் 20 வயதுடைய குமார் என்ற கல்யாணகுமார் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தபோது நான் அவரை விசாரித்ததில் அன்று காலை 08.00 மணியளவில் மறவன்குளம் கம்மாய் அருகில் அவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

1. 3 X 0.05 செ.மீ அளவில் வலது பக்க முன் நெற்றியில் ஒரு எலும்பு முறிவு போல் காணப்பட்டது.

2) 15 X 5 X 1 செ.மீ அளவில் வலது கால் முட்டியின் பின்புறத்தில் சதை சிதைவு காணப்பட்டது.

3) வலது பக்க கால் தொடையிலும் கீழ்பகுதியிலும் எலும்பு உடைந்திருந்தது.

4. உடலின் பல பகுதிகளில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. நான் அவரை சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் அவருக்கு வழங்கிய விபத்து அசாஆ 3 ஆகும்.

அதே நாளில் காலை 09.30 மணிக்கு அதே வழக்கில் சமப்ந்தப்பட்ட 20 வயதுடைய சுந்தர் என்பவரை அதே 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்த வரப்பட்டபோது நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது கால் தொடை எலும்பில் முறிவு காணப்பட்டது.

2) உடலின் பல பாகங்களிலும் சிராய்ப்பு காயம் காணப்பட்டது

நான் அவருக்கு சிகிச்சை மேற்கொண்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவர் 8 நாட்களாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அவருக்கு சிகிச்சை மேற்கொண்ட அரசு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்றிதழ் வழங்கியதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் என்பது கொடுங்காயங்கள் என்று குறிப்பிட்டு சான்று வழங்கினேன். நான் சுந்தர் என்பவருக்கு வழங்கிய **விபத்து பதிவேடு அசாஆ 4** ஆகும்.

அதே நாளில் காலை 09.30 மணிக்கு அதே வழக்கில் சமப்ந்தப்பட்ட 19 வயதுடைய மாயாண்டி என்ற பிதின்குமார் என்பவரை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்த வரப்பட்டபோது நான் அவரை பரிசோதித்தபோது அவர் இறந்த நிலையில் காணப்பட்டார். எனவே அவருடைய பிரதத்தை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அதை அவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டிலும் குறிப்பிட்டுள்ளேன்.நான் அவருக்கு வழங்கிய **விபத்து பதிவேடு அசாஆ 5** ஆகும். அன்று காலை 10.00 மணியளவில் மாயாண்டி என்ற பிதின்குமார் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். மேற்படி பிரேதத்திற்கு முன்பு இறப்பிற்கு முன்பு 1 முதல் 11 வெளிகாயங்கள் காணப்பட்டது. அதை பிரேத பரிசோதனை சான்றிதழில் குறிப்பிட்டுள்ளேன். நுரையீரல் சாதாரண நிலையில் இருந்தது. இருதயம் பரிசோதனையில் இடது வெண்ட்ரிக்கள் பகுதியில் ரத்தம் குறைவாக இருந்தது. வயிற்று பகுதியை அறுத்து பார்த்தபோது வலது பக்கத்திலுள்ள சிறுகுடல், பெருங்குடல் மற்றும் மலக்குடல் ஆகியவற்றிலும் அவற்றை சுற்றிலும் ரத்த கசிவு காணப்பட்டது. மற்ற உறுப்புகள் சாதாரண நிலையில் இருந்தது. அவருடைய இறப்பானது பிரேத பரிசோதனைக்கு 8 மணி நேரத்திற்குள்ளாக அவருக்கு ஏற்பட்டிருந்த பல்வேறு காயங்களின் விளைவாகவும் அதிகப்படியான ரத்த போக்கினாலும் இறந்திருக்க கூடும் என்று சான்று வழங்கினேன். மேற்படி மாயாண்டி என்ற பிதின்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட **பிரேத பரிசோதனை சான்றிதழ் அசாஆ 6** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

இறந்துபோன மாயாண்டி என்ற பிதின்குமார் என்பவர் அச்சமயத்தில் ஆல்கஹால் அருந்திருந்தாரா என்று பார்க்க இயலவில்லை. ஏனென்றால் அவருடைய வயிற்று பகுதி முழுவதும் அடிப்பட்டு ரத்தத்தோடு கலந்திருந்தால் கண்டறிய இயலவில்லை. அவ்வாறு மது அருந்தியிருந்தாலும் அறிந்துக்கொள்ள முடியாது. நான் மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பிய இருவருக்கும் மது அருந்தியிருந்தார்களா என்று பரிசோதனை செய்யவில்லை. மேல் சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட கல்யாண குமார் எத்தனை நாட்கள் கழித்து இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு எலும்பு முறிவு மற்றும் சிதைவு காயங்கள்

இருந்தன. சிதைவு காயங்கள் அவரது கால் பகுதியில் இருந்தன. கால் முறிவு மட்டுமே அவருடைய இறப்பிற்கு முக்கிய காரணம் இல்லை என்றால் பெரிய அளவு எலும்பு முறிவு இருந்தால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. விபத்து எதனால் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேனா என்றால் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். இறந்துபோன நபரையோ காயப்பட்ட நபரையோ பரிசோதித்தபோது அவர்களுக்கு விபத்திற்கு முன்னர் நோய்கள் இருந்தால் தெரிந்துக்கொள்ள முடியுமா என்றால் பரிசோதனையில் தெரியாது. அவருடைய மருத்துவ ஆவணங்களை பார்த்தால் தெரிந்துக்கொள்ள முடியும். அவர்கள் தானாக போய் வாகனத்தில் விழுந்தால் இதுபோன் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**